[12th November 1965

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முதல் (உ) வரை; கடலூர் நகராட்சி கழிவு நீர்க்கால் அமைக்கும் திட்டம்பற்றி ரூ. 27,000 மதிப்பீட்டுச் செலவில் புலனுய்வு நடத்த 1965 ஜனவரியில் அரசாங்கம் அனுமதி வழங்கியது. இப்புலனுய்வு முடிந்த பின்னர், இத்திட்டத்திற்கான செயற்குறிப்புகளைக் குறித்து அரசாங்கம் ஆலோசிக்கும்.

Drinking Water-supply

* 523 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to augment drinking water-supply for Dharmapuri; and

(*b*) if so, the details thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) In August 1965 the Government have sanctioned the investigation of a Water-supply Scheme for Dharmapuri. The Government will examine the proposals for sanctioning the Water-supply Scheme after investigation is completed.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES-TAX (THIRD AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 36 OF 1965)—*cont.*

* **திரு. து. ப. அழகமுத்து** : *கனம் தலைவர் அவர்களே, விற்பனை வரி திருத்த மசோதாவை ஒட்டி பேசுகின்றபோது நெருக்கடி நிலைமையையொட்டி நம் மாநிலத்தில் போட்டிருக்கிற வரிகளைப் பற்றியும் என் கருத்துக்களைச் சொல்லிவிட்டு விற்பனை வரி திருத்த மசோதாவைப்பற்றிப் பேச அனுமதி கேட்டுக் கொள்கிறேன்.*

நெருக்கடி நிலைமையையொட்டி நம் மாநிலத்தில் விதிக்க இருக்கிற வரிகளைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் தமது நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்கள். முதலாவதாக மின்சார வரி மூலமாக 2½ கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அடுத்து பெட்ரோல், டீசல் மூலமாக வரி ½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். மூன்ருவதாக தண்ணீர்த் தீர்வை, நிலத் தீர்வை சர்சார்ஜ் 25 சத விகிதம் மூலமாக 1½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான்காவதாக, விற்பனை வரியைச் சிறிது உயர்துவதன் மூலமாக 3½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆக மொத்தம் 8 கோடி ரூபாய்க்கு இந்த நெருக்கடி நிலைமையை யொட்டி வரி விதிக்கப்பட இருப்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிருர்கள். இந்த வரிகள் நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கப் போடப்படுகிறதா என்று பார்க்கிறபோது அதிலே